<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u> –

எதிர்மனுதாரர் எனக்கு அத்தை பொண்ணு முறை என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரரை சந்தித்து பேசி தான் திருமணம் முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்களுடைய திருமணமானது, இலஞ்சி குமாரர் கோவிலில் நடைபெற்றது என்றால் சரிதான். எங்களுடைய திருமணத்தில் வீடியோ எல்லாம் எடுத்தார்கள் என்றால் சரிதான். இலஞ்சி குமாரர் கோவிலுக்கு வெளியே ரோட்டிலிருந்து உள்ளே பிரகாரத்திற்கு செல்வதற்கு ஒரு 200 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். முருகன் சன்னதி முன்பு தான் எதிர்மனுதாரருக்கு தாலி கட்டி திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் இலஞ்சி குமாரர் கோவிலின் வெளியே உள்ள ரோட்டிலிருந்து குமாரர் கோவிலுக்கு நடந்து தான் வந்தார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரரால் அதிக நேரம் நிற்கவும் முடியாது. நடக்கவும் முடியாது. டென்மார்க்கில் எதிர்மனுதாரருக்கு வலது பக்க இடுப்பில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு இடது பக்க காலிலும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற டென்மார்க்கில் மருத்துவர் கூறினார் என்றால் சரிதான். 3 மாதங்கள் கழித்து எதிர்மனுதாரருக்கு இடது காலில் அறுவை சிகிச்சை டென்மார்க்கில் மேற்கொள்ளப்பட்டதா? என்றால் இல்லை. அவர் இந்தியாவிற்கு வந்து சிகிச்சை மேற்கொண்டார். எதிர்மனுதாரருக்கு இடது காலில் அறுவை சிகிச்சை செய்ய டென்மார்க்கில் அவரை நான் மருத்துவமனையில் சேர்த்து விட்டேனா? என்றால் இல்லை. நான் பி.இ.கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்துள்ளேன். டென்மார்க்கில் உள்ள மருத்துவர் எதிர்மனுதாரருக்கு இரு கால்களிலும் அறுவை சிகிச்சை செய்து விட்டால், சரியாகி விடும் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. இந்த நோய் சரியாகாது என்று சொன்னார்கள். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ குறிப்புகள் அனைத்தும் திருமணத்திற்கு முன்பு உள்ளவை என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் படுத்த படுக்கையாக இருந்து வருகிறார் என தெரிய வருகிறது என்று நான் டென்மார்க்கில் இருந்ததை வைத்து சொல்கிறேன் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு முன்பு ஜாதகம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். திருமணம் முடிந்த பின்பு நாங்கள் சம்பிரதாயப்படி திருச்செந்தூர், திருமலைக்கோவில்களுக்கு சென்றோமா? என்றால் திருமலைக்கோவிலுக்கு செல்லவில்லை. திருச்செந்தூர் சென்றோம். அம்பாசமுத்திரம் இசக்கியம்மன் கோவிலுக்கு சென்றோமா? என்றால் செல்லவில்லை. கொரோனா பெருந்தொற்று காலத்தில நான் 50 நாட்கள் எதிர்மனுதாரர் வீட்டில் தான் தங்கியிருந்தேன் என்றால் சரிதான். நான் முதலில் எல் அன் டி கம்பெனியில் வேலை பார்த்து விட்டு, தற்போது சோலார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு மாத வருமானம் ரூ.4,50,000/- என்றால் சரியல்ல. எனக்கு மாத வருமானம் ரூ.3,00,000/- ஆகும். எனது மனைவி என்னுடன் இருந்தால், டென்மார்க் சட்டப்படி எனக்கு ரூ.50,000/- Allowance உண்டு என்றால் இல்லை. என் மனைவிக்கு விஷா இல்லை. திருமணமான பிறகு எனது மனைவியை 2021ல் டென்மார்க்கிற்கு அழைத்து சென்றேன். டென்மார்க் நாட்டிற்கு சென்று நானும், என் மனைவியும் சேர்ந்து அந்த நாட்டை சுற்றி பார்த்தோம் என்றால் இல்லை. இந்தியாவிலிருந்து செல்லும் போதே அவர் வீல் சேரில் தான் வந்தார். என்னுடைய அலைபேசி எண்.9769735156 என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு முன்பு என்னுடைய கடன் தொகையான ரூ.2,50,000/-ஐ எதிர்மனுதாரர் தான் அடைத்தார் என்றால் சரியல்ல. நான் என்னுடைய சம்பாத்தியத்தில் தான் அடைத்தேன். நான் காசோலை எழுதிக் கொடுத்து தான் கடன் வாங்கியிருந்தேன் என்றால் அது என்னுடைய காசோலை இல்லை. எனது அப்பாவின் காசோலை மற்றும் அவரது கடன் தொகையாகும். எங்களின் திருமண செலவுகளை எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் தான் செலவு செய்தார்கள் என்றால் சரிதான். 3 பவுனில் செயின், 12 கிராம் பிரைஸ்லெட், 6

கிராம் மோதிரம் இவைகளை எதிர்மனுதாரர் வீட்டில் திருமணத்திற்காக எனக்கு போட்டார்கள் என்றால் சரிதான். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அதாவது எதிர்மனுதாரர்க்கு நோய் இல்லை என்றும், அவர் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு நல்ல நிலையில் இருக்கிறார் என்றும், எனக்கு விவாகரத்து வேண்டும் என்றும் நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு திருமணம் ஆவதற்கு முன்பே அவருக்கு இந்த நோய் உள்ளது. அதனை மறைத்து திருமணம் செய்து வைத்தார்கள். எதிர்மனுதாரர் மனரீதியாக கொடுமைப்படுத்தினார் என்று என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணம் ஆன முதலிரவே அன்று எதிர்மனுதாரருக்கு கால்களில் வலி ஏற்பட்டு எங்கள் இருவருக்கும் இடையே தாம்பத்திய உறவு எதுவுமின்றி எதிர்மனுதாரர் என்னை மனரீதியாக கொடுமைப்படுத்தினார். எங்கள் இருவருக்கும் தாம்பத்ய உறவு இல்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு டென்மார்க் மற்றும் இந்தியாவில் மருத்துவம் பார்த்த மருத்துவர்கள் அவருக்கு இந்த நோய் சரியாகாமல் தாம்பத்ய வாழ்க்கை இருக்காது என்று கூறினார். எதிர்மனுதாரரை நான் தான் உதாசினபடுத்தி வருகிறேன் என்றும், நான் தாக்கல் செய்த இந்த மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.